காலிங்கராயன் பிறந்த கனகபுரம் பகுதியை படத்தில் காணலாம்.

# காலிங்கராயன் பிறந்த கனகபுரம்

கொங்கு பாண்டியர்கள் ஆட்சிக்காலத்தில் பூந்துறை நாட்டின் ஆட்சிப்பிரதிநிதியாக விளங்கியவர் காலிங்கராயன். கொடுமுடி, வெள்ளோடு, ராமநாதபுரம் புதூர், அந்தியூர், திங்களூர், குன்னத்தூர், விஜயமங்கலம், சர்க்கார் பெரியபாளையம், ஊத்தூர், குடிமங்கலம், பேரூர், கரூர், பாரியூர், மொடச்சூர், வெஞ்சமாங்கூடல், நெரூர் உள்ளிட்ட பகுதிகள் காலிங்கராயனின் ஆட்சிக்கு கீழ் இருந்தன. இந்த பகுதிகளில் எல்லாம் கிடைத்த கல்வெட்டுகளில் காலிங்கராயன் பெயர் பொறிக்கப்பட்டு உள்ளன. எனவே இவர் அமராவதி ஆற்றுக்கு வடக்கு, காவிரி ஆற்றுக்கு மேற்கு, பேரூர் பகுதியின் கிழக்கு, அந்தியூரின் தெற்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மத்திய கொங்கு மண்டலத்தின் ஆட்சி அதிகாரியாக விளங்கி இருக்கிறார்.

தனது ஆட்சிக்காலத்தில் நிர்வாகத்திறன், அறக்கொடைகள் நிறைவேற்றுதல், மக்கள் குறைகேட்பது என்று பல்வேறு விஷயங்களுக்காக அவர் கொங்குநாடு முழுவதும் பயணம் செய்தார் என்று காலிங்கராயன் குறித்த தகவல்கள் ஒவ்வொன்றும் ஆச்சரியமானவை.

காலிங்கராயன் கி.பி.1235-ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை பெயர் நஞ்சையன். காலிங்கராயன் அணை கட்டின் பட்டயத்தில் கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணைகட்ட வேணுமென்று... என்ற வரிகள் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதன்படி காலிங்கராயன் பிறந்த ஊர் கனகபுரம் என்பது தெளிவாகிறது. இவரது இயற்பெயர் லிங்கையன். வெள்ளோட்டில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கனகபுரம். ஒரு சிறிய கிராமமாகவே இன்னும் காலத்தை கடத்திக்கொண்டு இருக்கும் கனகபுரத்தில் இருந்துதான் காலிங்கராயன் பிறந்து வளர்ந்து, புதிதாக ஒரு ஜமீனையே உருவாக்கினார் என்கிற வரலாறு மெய்சிலிர்க்க வைக்கிறது. சிறுவயதிலேயே அறிவாற்றல் மிக்கவராக விளங்கிய காலிங்கராயன் தனது 30-வது வயதில், அதாவது கி.பி.1265-ம் ஆண்டு கொங்கு மண்டலத்தை ஆட்சி செய்த சடையவர்மன் வீரபாண்டியனிடம் பணியில் சேர்ந்தார். அவரது அறிவாற்றல், மதிநுட்பம் ஆகியவற்றால் பதவி உயர்வை பெற்று கொங்கு நாட்டில் பூந்துறை நாட்டுப்பகுதிகளுக்கு ஆட்சி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அந்த காலக்கட்டத்தில் தற்போதைய ஈரோடு மாவட்டத்தின் பெரும்பகுதி கடும் வறட்சியான பகுதியாக இருந்தது. கம்பும், சாமையும் மட்டுமே விளையும் வானம் பார்த்த பூமியாக அவை இருந்தன. நெல் விளைச்சல் என்பது காவிரி பாயும் மண்ணில் மட்டுமே இருந்தது. பூந்துறை நாட்டில் காவிரி, பவானி, அமராவதி ஆகிய ஆறுகள் ஓடியும் விளைச்சல் கொடுக்க எந்த நதியும் இல்லை. மழைக்காலத்தில் பெருக்கெடுத்து ஓடும் பவானியின் வெள்ளம் காவிரியில் வீணாக கலந்தது. இப்படி பெருக்கெடுக்கும் வெள்ளம் மட்டும் இருந்தால் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை நெல்விளையச் செய்யலாம் என்று எண்ணிய காலிங்கராயன் அதற்காக வீரபாண்டியனிடம் அனுமதி கேட்டார். அவரும் அனுமதி அளித்தார். ஆனால் வாய்க்கால் வெட்டுவது சாதாரண காரியமா? இன்றைய காலம் போல் திட்டம் போட்டால் கமிஷன் கிடைக்கும் காலம் அல்ல; திட்டம் போடுபவர்கள் பணத்தையும் திரட்ட வேண்டும். காலிங்கராயன் அணைகட்டுவதையும், வாய்க்கால் வெட்டுவதையும் ஒரு தவமாக மேற்கொண்டார். கி.பி.1270-ம் ஆண்டு அணை கட்டும் பணியையும், வாய்க்கால் வெட்டும் பணியையும் தொடங்கினார். கி.பி.1282-ம் ஆண்டு பணிகளை முடித்தார். தமிழ் மாதமான தை 5-ந் தேதி அணையை திறந்து வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீரை பாய்ச்சினார். 12 ஆண்டுகள் தவமாக தவமிருந்து பணியை முடிக்க அவர் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் சொல்லி மாளாதது. அணை கட்டுவதற்காக கல் வேண்டும் என்பதற்காக ஊராட்சிக்கோட்டை மலையையே விலைக்கு வாங்கியவர். அது மட்டுமின்றி, கல் கொண்டு வரும் வழியில் பிரச்சினைகள் வந்து விடக்கூடாது என்று மலையை வாங்கிய அதே விலைக்கு வழியையும் வாங்கினார். தானே எருமை மாடுகளை கட்டிய வண்டியில் கற்களை கொண்டு வந்தார் என்று கூறும் காலிங்கராயன் வரலாறு, தலைவன் என்பவர் எப்படி செயல்பட வேண்டும் என்பதை ஓங்கி உரைக்கிறது.



வெள்ளோட்டில் உள்ள காலிங்கராயன் சிலை.

காலிங்கராயன் வாய்க்கால் கி.பி.13-ம் நூற்றாண்டிலேயே மிகப்பெரிய தொழில் நுட்பத்துடன் வெட்டப்பட்டது. இந்த வாய்க்கால் ஐம்பத்து ஆறரை மைல் தூரம் செல்கிறது. வாய்க்காலுக்கு இடப்பக்கம் மட்டுமே கரை இருக்கும். வலது கரை நிலமே கரையாக உள்ளது. அந்த அளவுக்கு நிலத்தை ஆய்ந்து அறிந்து வாய்க்காலை வெட்டினார். அணைக்கட்டில் பெரிய பாறை கற்களை ஒன்றோடு ஒன்று இணைக்க பாறைகளில் துளையிட்டு இரும்பை காய்ச்சி ஊற்றி இணைத்தார். இப்படி பல விஷயங்கள் உள்ளன. அதுமட்டுமின்றி பவானி, நொய்யல், அமராவதி ஆகிய 3 நதிகளையும் இணைக்கும் மிகப்பெரிய திட்டமாகவே இது உருவாகியது. பவானி காலிங்கராயன் பாளையத்தில் இருந்து கொடுமுடி அருகே உள்ள ஆவுடையாபாறை வரை பாசனம் கொடுக்கும் காலிங்கராயன் வாய்க்கால் நொய்யல் ஆற்றில் கலக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அதுமட்டுமின்றி, ஆவுடையாபாறையில் இருந்து வாய்க்கால் 2 ஆக பிரிந்து கல்லுக்கட்டுமடை என்ற பகுதிவரை சென்று நொய்யல் ஆற்றில் கலக்கிறது.

வாய்க்கால் நேராக செல்லாமல் வளைந்து நெளிந்து செல்லும். இதனால் கோணவாய்க்கால் என்ற பெயரும் இதற்கு உண்டு. காலிங்கன் என்ற பாம்பு கனவில் வந்து வழிகாட்ட, அதன்படி வெட்டப்பட்டது காலிங்கராயன் வாய்க்கால் என்றும், எப்படி வாய்க்கால் வெட்டுவது என்று காலிங்கராயன் சிந்தித்துக்கொண்டு இருந்தபோது பாம்பு ஒன்று வளைந்து நெளிந்து ஓட, அது சென்ற வழியே வெட்டப்பட்டது காலிங்கராயன் வாய்க்கால் என்றும் பல கதைகள் உண்டு. ஆனால் சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பே வித்தியாசமாக சிந்தித்து இன்றும் நிலைத்து நிற்கும் ஒரு வாய்க்காலை தோண்டியவர் காலிங்கராயன். வாய்க்கால், அணை என்று அவரது பெயரை இன்றும் பறைசாற்றும் சின்னங்கள் ஏராளம். வாய்க்காலை வெட்டிய அவர், அதை தனது சந்ததியினர் பயன்படுத்த மாட்டார்கள் என்று தண்ணீரின் மீது சத்தியம் செய்து கனகபுரத்தை காலி செய்து பொள்ளாச்சி அருகே ஊத்துக்குளிக்குசென்று அங்கு ஒரு ஜமீனை உருவாக்கி ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்தார்.

இன்று ஈரோடு மாவட்டத்தில் அவர் நினைவாக அவர் பிறந்த கனகபுரம், அவர் ஆட்சியின் தலைமை பீடமாக இருந்த வெள்ளோடும், காலிங்கராயன் பாளையம் கிராமமும், காலிங்கராயன் அணைக்கட்டும், காலிங்கராயன் வாய்க்காலும் உள்ளன.

கடந்த 2007-ம் ஆண்டு வெள்ளோடு பகுதியில் காலிங்கராயனுக்கு மார்பளவு சிலை அமைக்கப்பட்டது. தற்போது தமிழக அரசு காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் அவருக்கு மணிமண்டபமும், முழு உருவச்சிலையும் அமைத்து இருக்கிறது. காலிங்கராயனுக்கு உத்தமமந்திரி என்ற பட்டப்பெயரும் உண்டு. அவர் தனது ஆட்சிக்காலத்தில் பல்வேறு குளங்களை வெட்டினார். பழுதடைந்து கிடந்த பல குளங்களை தூர்வாரினார். கோவில்களுக்கு திருப்பணி செய்தார். காடுகளை அழித்து புதிய ஊர்களை உருவாக்கினார். அனைத்து ஜாதி மக்களுக்கும் உரிமைகள் அளித்தார். எனவே புலவர்கள் அவர் புகழை பாடினார்கள். கொங்குமண்டல சதகம், சென்னிமலை யாண்டவர் பிள்ளைத்தமிழ், திருச்செங்கோடு திருப்பணிமாலை, ஈரோடு அப்பாரப்பன் பள்ளு உள்ளிட்ட பல்வேறு புத்தகங்களில் காலிங்கராயன் புகழப்பட்டார்.

இத்தனை புகழுக்கும் பெருமைக்கும் உரிய காலிங்கராயன் நம்ம ஊரைசேர்ந்தவர் என்பதுதான் கனகபுரம், வெள்ளோடு மக்களின் பெருமை, ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த நமக்கும்தான்.

காலிங்கராயன் வரலாற்றை இன்னும் விரிவாக நாம் பார்க்க வேண்டும். அதற்குள் பெருமை மிகு இன்னும் சில இடங்களையும் பார்க்க வேண்டியது இருக்கிறது. அதற்காக...

தொடர்வோம்...

(தகவல்கள்:- கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு.)